## எதிரி மற்றும் ஆட்சியாளர்களை எதிர்கொள்ளும்போது ஓதவேண்டிய துஆ

1 اللَّهُمَّ إِنَّا نَجْعَلُكَ فِي نُحُورِهِمْ، وَنَعُوذُ بِكَ مِنْ شُرُورِهِمْ

*பொருள்: எங்கள் இறைவனே, நாங்கள் உன்னையே அவர்களுக்கு எதிராக நிறுத்துகிறோம் மேலும், அவர்களுடைய தீங்குகளிலிருந்து உன்னிடமே பாதுகாப்பு தேடுகின்றோம். (அபூ தாவூத்)*

2 اللَّهُمَّ أَنْتَ عَضُدِي وَنَصِيرِي، بِكَ أَحُولُ، وَبِكَ أَصُولُ، وَبِكَ أُقَاتِلُ

*பொருள்: எங்கள் இறைவனே, நீயே என்னுடைய பக்க பலமான ஆதாரமாகவும் உதவி செய்பவனாகவும் இருக்கின்றாய். நீ நாடிய வகையிலேயே நான் சுற்றிக்கொண்டிருக்கின்றேன், நீ நாடியவாறே பகைவர்களை எதிர்கொள்ளவும் செய்கின்றேன், நீ நாடியவாறே உன்னுடைய உதவியுடன் எதிரிகளோடு போரிடவும் செய்கின்றேன் (அபூ தாவூத், திர்மிதி).*

3 حَسْبُنَا اللَّه وَنِعْمَ الوَكِيلُ

*பொருள்: அல்லாஹ்வே எங்களுக்குப் போதுமானவன், மேலும், அவனே மேலான பாதுகாப்பாளனாக இருக்கின்றான் (புக்ஹாரி).*

* * *